# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C NO.1/2024 |
| Deposition of witness | : | P.W.3 |
| List of witness | | L.W.3 |
| Name | : | சதீஷ்குமார் |
| Father's /Husband Name | : | விஜயகுமார் |
| Village | : | நல்லமாங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 30 |
| Occupation | : | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 9th day April 2026.
Accused absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 3 வருடம் முன்பாக தேதி மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் கும்பகோணத்திலிருந்து அரசு பேருந்தில் நன்னிலம் நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது சுமார் 04.00 மணியளவில் வெள்ளமண்டபம் அருகே சென்று கொண்டிருந்தபோது அரசு பேருந்தினுடைய ஓட்டுநர் பிரேக் அடித்திருக்கலாம் படியில் நின்றுகொண்டிருந்த ஒரு அம்மா கீழே விழுந்து விட்டார். நான் பேருந்தின் பின் சீட்டில் அமர்ந்திருந்தேன். நான் கீழே விழுந்த நபரை சென்று பார்க்கவில்லை. அரசு பேருந்தினுடைய ஓட்டுநர், நடத்துனர் மற்றும் வாகனப்பதிவு எண் ஆகியவற்றை பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரி திருஞானம் என்ற பெயரை நான் கேள்விபடவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 21.12.2017 ம் தேதி அன்று கும்பகோணம் நன்னிலம் வழியாக நாகப்பட்டிணம் செல்லும் TN 68 N 0806 என்ற பதிவெண் கொண்ட அரசு போக்குவரத்து கழக பேருந்தில் நான் சென்று கொண்டிருந்த போது சீதக்கமங்களம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தத்திற்காக நடத்துநர் விசில்

அடித்தார் என்றும் பேருந்தினுடைய ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்றதால் மேற்படி பேருந்து நிலையத்தை தாண்டி திடீரென பிரேக் அடித்ததால் பேருந்தில் முன்னால் நின்றுகொண்டிருந்த நபர் நிலை தடுமாறி தரையில் கீழே விழுந்து விட்டார் என்றும் அதில் அவருக்கு இடுப்பு பகுதியில் உள்காயமும் சிராய்ப்பு காயமும் ஏற்பபட்டது என்றும் பின்னர் அந்த நபரின் பெயர் பஞ்சவர்ணம் என்று தெரிந்துகொண்டேன் என்றும் பின்னர் காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சம்பவத்தைநேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் வாதி மற்றும் ஆஜர் எதிரியினுடைய பெயர் தெரியாது என்றும் சங்கதிகளை மறைத்தும் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.09 12:09:44 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.